பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

04 06 2025 Wednesday 6 30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சாதிவாரி கணக்கெடுப்புடன் கூடிய மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2027ஆம் ஆண்டு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

- நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் அடுத்த மாதம் 21ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2022 மற்றும் 23ஆம் ஆண்டுக்கான தமிழக அறிவியல் அறிஞர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கோப்பையை வென்ற பெங்களூரு அணியினருக்காக நடைபெற்ற வெற்றிப் பேரணியின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

சாதிவாரி கணக்கெடுப்புடன் கூடிய மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2027ஆம் ஆண்டு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அந்த ஆண்டு மார்ச் 1ஆம் தேதியை அடிப்படையாக கொண்டு நடத்தப்படும் என்று உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது

இதற்கான அறிவிக்கை வரும் 16ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் அடுத்த மாதம் 21ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தொடரை ஆகஸ்ட் 12ஆம் தேதிவரை நடத்த பரிந்துரைப்பது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

>>>>><<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா உரிய பதிலடி கொடுத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஆஸ்திரேலிய துணைப் பிரதமர் திரு. Richard Marles–சுடன் நடத்திய பேச்சுக்களின் போது அவர் இவ்வாறு கூறினார்.

தீவிரவாதிகளையும், தீவிரவாத அமைப்புகளையும் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு ஒருங்கிணைந்து பணியாற்றுவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழக அறிவியல் அறிஞர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2022 மற்றும் 23ஆம் ஆண்டுக்கான விருதுகளுக்கு தலா 12 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, 2022ஆம் ஆண்டுக்கான மருத்துவவியல் விருது, சென்னை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் தேரணிராஜனுக்கும், அண்ணா பல்கலைக் கழகத்தின் உயிரி தொழில்நுட்பத்துறை பேராசிரியர் பா.சு. லெட்சுமிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் பாதிப்பு காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தற்போது கூடுதல் மருத்துவக் கல்வி இயக்குநராக பணியாற்றி வரும் டாக்டர் தேரணிராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தேரணிராஜன் 52 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

மாநிலங்களவைத் தேர்தல் மற்றும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

>>>>><<<<<

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக அக்கட்சி தனது சமூகவலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் முதன்முறையாக கோப்பையை வென்ற பெங்களூரு அணியினருக்காக நடைபெற்ற வெற்றிப் பேரணியின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

அஹமதாபாதிலிருந்து பெங்களூரு திரும்பிய அணியினர் விதான் சவுதாவிலிருந்து சின்னசாமி ஸ்டேடியம் வரை சென்ற வெற்றிப் பேரணியில் கூட்ட நெரிசல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைப்பதற்காகவும் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருவதாக கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் டாக்டர் சுந்தரராஜ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சுந்தரராஜ் 41 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள நிலையில், இதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.

யோகா பயிற்சியின் நன்மைகள் குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

கோவையைச் சேர்ந்த 70 வயதான திருமதி. ராணி யோகா பயிற்சியின் மூலம், இந்த வயதிலும் தாம் கல்வி கற்பதாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ராணி 43 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஆகாஷவாணியின் சென்னை ரெயின்போ பண்பலை வரும் 9ஆம் தேதி முதல் நேயர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில், நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து ஒலிபரப்புகிறது.

இதன்படி பகல் நேரங்களில், Rush hour Rainbow, Rainbow Rap, Get set go, Hi Snagithiye போன்ற நிகழ்ச்சிகளுடன், இரவு நேரங்களில் ரெயின்போ ரீவைன்ட், காற்றின் மொழி, நீங்காத ராகம், இன்னிசை இரவு போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த 3 தினங்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் மாநிலத்தின் ஒரு சிலபகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரில் உள்ள மீன்பிடி துறைமுகத்தின் தூண்டில் வளைவு பகுதியில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>><<<<<

மேட்டூர் அணையில் நீர்வளத்துறையின் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் திரு. தயாளு குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான குறைதீர் கூட்டம் வரும் 13ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

CAVA லீக் வாலிபால் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா - ஈரானை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஐசிசியின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் Smriti Mandhana பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

>>>>>END<<<<<